# பிரான்ஸ் மாநகரசபைத் தேர்தலில் நம்மவர்கள்

பிரான்ஸ் 2007 இல் இரு தேர்தல்களை சந்தித்தது. அரச தலைவருக்கான தேர்தல், பாராளுமன்றத்திற்கான தேர்தல் இவைகள் இரண்டிலும் புலம்பெயர்ந்து இங்கு வந்து பிரஜா உரிமை பெற்ற கணிசமான தமிழர்கள் தமது வாக்குகளை பதிவு செய்து, தங்களை இந்நாட்டு அரசியலில் இணைத்துக் கொண்டனர்.

இதனுடாக இந்நாட்டு அரசியலை தீர்மானிக்கும் உரிமையும், கடமையும் கொண்டவர்கள் ஆகிவிட்டனர். இந்நாட்டின் அரசியல் சூழல் எமது வாழ்க்கையை பாதிக்கிறது, இவைகளில் உள்ள நன்மை தீமைகளை விரும்பியோ விரும்பாமலோ சீர்தூக்கி பார்க்க வேண்டிய இடத்தில் நாம் நிற்கிறோம்.

தாயகப் பிரச்சினைகள் காரணமாக 1980க்கு பின் பெருமளவில் ஈழத் தமிழர்கள் பிரான்ஸ் நாட்டில் வாழத் தொடங்கினர்.

இன்று பிரான்ஸின் பல பகுதிகளிலும் செறிவாக வாழ்ந்து வரும் தமிழர்கள் பல துறைகளிலும் முன்னேறி வருகின்றனர்.

அதே போல இங்கேயே பிறந்த எமது இளம் தலைமுறையினர் பிரஞ்சுத் தமிழர்களாகவே வாழத் தொடங்கிவிட்டனர். இவர்களில் பெரும் பகுதியினர் இங்கேயே வாழப் போகிறார்கள்.

இவர்களின் கல்வியும் உழைப்பும் பொருளாதார பலத்தை ஏற்படுத்திக் கொண்டாலும் அதற்கான பாதுகாப்பு அரசியல் பலத்தில் தான் தங்கியுள்ளது

அதற்கானஅடிப்படைஅரசியல் பாதுகாப்பை ஏற்படுத்தும் முகமாக 2008 இல் நடைபெறும் மாநகரசபை தேர்தலில் எம் இனத்தவர்கள் வேட்பாளர்களாக 14 நகர சபைகளில் 16 பிரதிநிதிகள் இணைத்துக் கொண்டுள்ளார்கள்.

இவர்களை மாநகரசபைகளில் பிரதிநிதிகளாக்கி எமக்கான அரசியல் களத்தை நாம் திறந்து விடல் வேண்டும். இதற்கான ஒழுங்குகளை 61 தமிழ்ச் சங்கள் மற்றும் அமைப்புக்களின் கூட்டமைப்பான பிரான்ஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு என்கிற அமைப்பு செய்துவருகின்றது.

**வேட்பாளர்கள் விபரம்**

(`rgeNteuil) (95100)ஆர்ஜோன்தோய் - திரு டொமினிக் இலங்கநாதன்

(Lbuvre) (95380) லூவ்ர் - திருமதி. வேர்ஜினி சபாரட்னம்

Obussainville (95190) குசான்வீல். செல்வி ரம்ஜா ஜெயமோகன்

Villiers Le f;\el(95400) வில்லியே லூபெல் - திருமதி தங்கா பாஸ்கரன்

Sarcelles(95200)சார்சேல் - செல்வி சூசைபிள்ளை சன்டிறின் சோபியா (இடது)

Oarges les ObNesses95140) கார்ஜ் லே கொனேஸ திரு கரிப்பிரசாத் பாலசுந்தரம்

La CburNeuve(93120)லாகுர்நோவ் - திரு.புவனேந்திரன், செல்வி சரணியா, செல்வி மதுரா

`ulNay Sbus f;\bis(93600) ஒலுனே சூ புவா - செல்வி தட்சாயினி தேவராஜ்

Clichy Sbus f;\bis(93390) கிளிச்சி சூ புவா - திருமதி நகுலேஸ்வரி அரியரட்ணம்

f;\bNdy (93140)பொன்டி - திருமதி லீலாவதி ராஜேந்திரம்

Qaris 8]; (75018) பரிஸ் 18 - திரு கிருபாகரன்

Chelles(77500)செல் - திருமதி வில்லியம் றெஜிநோட் அசந்தா

Evry CbugraNs (91000)எவிறி குக்றோன் - திருமதி பிரிதி நவனீதராயு

(villeNeufe st gebrges) வில்நெவ் சென் .ஜோர்ச் - ரவீந்திரநாத் கலையரசி

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

# இன்னுமொரு இடி இறங்கியது



சிறிலங்கா படைகளின் ஆழ ஊடுருவும் படையணியினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பொதுமக்கள் பயணிக்கும் வாகனங்கள் மீது கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் நடாத்துவது அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது.

நேற்றைய தினம் புளியங்குளத்திற்கும் மாங்குளத்திற்கும் இடையில் ஏ9 நெடுஞ்சாலையில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கிட்டினன் சிவநேசன் அவர்கள் பயணித்த வாகனம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அவருடன் அவரது சாரதியும் கொல்லப்பட்டனர்.

2004ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய திரு. சிவநேசன் மிகவும் எளிமையான மனிதர், தமிழ்த் தேசியத்தில் பற்றுறுதி கொண்டவர். அவர் நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு முன்னர் எட்டு வருடங்களாக யாழ் மாவட்ட தெங்கு பனம் பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவராக கடமையாற்றினார.

வடமராட்சி யாக்கரு பகுதியை வதிவிடமாகக் கொண்ட அவர் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் கல்வி கற்றார். தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கத்தில் கணக்காளராகவும் அதன் தொழிற் சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

கடந்த மாதம் 21ம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது, தான் பாராளுமன்ற அமர்வுகளுக்காக வன்னியிலிருந்து வரும் போது சோதனைச் சாவடிகளில் சிறிலங்காப்படையினரால் சோதனை என்ற பெயரில் தான் அவமானப்படுத்தப்படுத்தப்படுவதைச் சுட்டிக் காட்டி, இவ்வாறான அடக்கு முறைகள் தொடருமானால் ஈழமும் கொசோவாக மாறும் எனக் குறிப்பிட்டிருந்தார். இதுவே அவரது இறுதியுரையாகவும் அமைந்துவிட்டது.

தொழிலாள வர்க்கத்தின் பிரதிநிதியாய், மண்ணின் மைந்தனாய் தமிழ் மக்களை பிரநிதித்துப்படுத்திய அவரது இழப்பு தமிழீழ மண்ணுக்கு ஏற்பட்ட பேரிழப்பு.

1951ம் ஆண்டு பிறந்த அவருக்கு மனைவியும், இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர்..

அவரது இழப்பில் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்களை தெரிவிப்பதுடன், தமிழீழ மக்களின் துயரில் *ஒரு பேப்பர்* ரும் பங்கெடுத்துக் கொள்கிறது.

IRO
Immigration – குடிவரவு

கடந்த 11 ஆண்டுகளாக பிரித்தானியாவில் குடிவரவுத்துறையில் முன்னணி நிறுவனம்

உங்கள் சகல விதமான
- குடிவரவு விண்ணப்பங்கள்
- மேன்முறையீடுகள் (Appeals)
- இலங்கை, இந்தியாவில் விசா மறுக்கப்பட்டவர்களுக்கான மேன்முறையீடுகள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்

இது தவிர
- Human Rights - Humanitarian Protection, 10 years - 14 years விண்ணப்பங்கள்,
- புதிய அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் (Fresh Application)

விபரங்கட்கு: திரு குலேந்திரன்
திரு ராம்
திரு சூரியகுமாரன்

Tel: 020 8682 4494
Mob: 07976 759 725
07939 261 540
07810 848 017

OISC

1083 Garratt Lane,
Tooting, London
SW17 0LN

(குடிவரவு ஆணையாளர் அலுவலகத்தினால் குடிவரவு ஆலோசனைகள் வழங்க Level 3 அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனம்.)

முன் அனுமதி பெற்று வரவும்
அலுவலக நேரம் 11.00 – 17:30
திங்கள் முதல் வெள்ளி